DEPOSITION OF WITNESS

(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE , SENDAMANGALAM

C.C.No.125/2025

PW - 2

| | | |
|---|---|---|
| Name | : | கௌதம் (Lw - 2) |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------26

**(**எதிரி ஆஜர்**)**

**BNSS** பிரிவு **348-**ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை **Date : 21.04.2026**

எதிரி வாதி சுகண்யாவிடம் கடந்த 04.10.2024ம் தேதி பிரச்சனை செய்ததை நான் கேட்டு தெரிந்துகொண்டேனா என்றால் அவர்கள் பேசிக்கொண்டிருந்ததை நான் கேட்டேன். சம்பவம் நடந்தபோது நான் வாதி சுகண்யாவின் அறையில் இருந்தேனா என்றால் இல்லை நானும் சாட்சி சாந்தகுமார் மற்றும் சாட்சி மனோஜ்குமார் ஆகியோர் சத்தம் கேட்டு உள்ளே சென்றோம். வாதி எப்போது காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சம்பவம் நடந்தஅன்றே புகார் கொடுத்தார் நானும் சாட்சிகள் மனோஜ்குமார், சாந்தகுமார் மற்றும் வினோத் ஆகியோர் உடன் சென்றோம். போலிசார் வாதி புகார் கொடுத்த அன்றே என்னையும் மற்ற சாட்சிகளையும் காவல்நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள் என்றாலும் பின்னிட்டு சில காலம் கழித்து வங்கிக்கு வந்து விசாரித்தார்கள் என்றாலும் சரிதான். எத்தனை நாட்கள் கழித்து வங்கிக்கு வந்து எங்களை விசாரித்தார்கள் என்றால் சுமார் 10 நாட்கள் கழித்து வங்கிக்கு வந்து விசாரித்தார்கள்.

நானும் சாட்சிகள் மனோஜ்குமார், சாந்தகுமார் மற்றும் வினோத் ஆகியோர் வாதியின் கேபினுக்கு சென்று எதிரியை தடுத்து வெளியே இழுத்து சென்றோம் என்றால் சரிதான். எதிரி வாதி சுகண்யாவின் அறைக்குள் செல்வதற்கு முன்பு அறைக்கு வெளியே எவ்வளவு நேரம் இருந்தார் என்றால் 2 நிமிடம் இருந்திருப்பார். நான் சொல்வதுபோல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றாலும் அவ்வாறு சம்பவம் எதுவும் சி.சி.டி.வி. கேமராவில் பதிவு ஆக வில்லை என்றாலும் சரியல்ல. புகாரினை யார் எழுதினார்கள் என்றால் நாங்கள் சொல்ல சொல்ல எழுதிக்கொண்டு போலிசாரிடம் கொடுத்தார். நான் சொல்வதுபோல் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றாலும் வாதி சுகண்யா எங்களது வங்கியின் மூத்த மேலாளர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை**:** இல்லை.

**Taken down before me in open court and read/interpreted to the witness and acknowledged by him/ her to be correct.**

**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**
**Judicial Magistrate,**
**Sendamangalam**